1987 ஏப்ரல் 25] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

நாட்கள் வேலை பார்த்தாலே நிரந்தரமாக்க வேண்டுமென்று சட்டம் இருக்கும் போது 240 நாட்கள் வேலை பார்த்தவர்களையெல்லாம் நிரந்தரமாக்க வேண்டும். ஒரு நாள், இரண்டு நாள் வேலை பார்த்திருந்தால்கூட அவர்கள் நிரந்தரமாக்கப்பட்டு, வருடக்கணக்கில் வேலை பார்த்தவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பது நியாயமில்லை. வயது அதிகமாகி விட்ட காரணத்தால் அவர்கள் வேறு வேலைக்குச் செல்ல முடியாது. அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, மீண்டும் டெம்பரரியாக வேலை பார்த்தவர்களுடைய விவரங்களை அரசாங்கம் கேட்டு, அந்த விவரங்களைப் பெற்றிருக்கிறது. ஆகவே, அந்த உத்தரவை மறுபரிசீலனை செய்து, ஏற்கெனவே வேலை பார்த்து, இப்போது வேலையில் இல்லாமல் இருப்பவர்களை அரசுத் துறையில் அல்லது வேறு துறைகளில் நேரடியாக நியமிக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, வேலையில் சேரும்போது தற்காலிகமான வேலை என்று சொல்லிதான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நிரந்தரமான வேலைதான் பார்க்க வேண்டுமென்றால் அவர்கள் தற்காலிக வேலைக்கு வந்திருக்கக்கூடாது. அதற்கான நிலைமைகளை ஏற்கெனவே தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். டி. ஆர். வேங்கடரமணன் போன்றவர்களும் அவர்களுக்கு யோசனை சொல்லியிருக்க வேண்டும். எந்த அளவுக்கு நிரந்தரமாக்க முடியுமோ அந்த அளவுக்கு நிரந்தரமாக்கியிருக்கிறோம். தேர்வாணைக்குழு அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது தற்காலிகமாக இருப்பவர்களை அனுப்பிவிட்டுத்தான் அவர்களைத் தேர்வுசெய்து நியமிக்க முடியும். அதற்குப் பின்னாலே இருக்கின்ற வாய்ப்புக்கு ஏற்ப தேர்வாணைக்குழு மூலமாக அவர்கள் வேலைவாய்ப்புப் பெறலாம் என்று உத்தரவிட்டிருக்கிறோம். இதற்கான விளக்கங்களை பலமுறை தந்திருக்கிறோம்.

(இ) நீலகிரி மாவட்டம் கூடலூர் மருத்துவ மனையில் படுக்கை வசதிகளை அதிகரித்தல்

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள அரசினர் மருத்துவ மனையில் போதுமான படுக்கை வசதிகள் இல்லாததால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

நிலகிரி மாவட்டம், கூடலூர் அரசு மருத்துவமனை தற்போது 94 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. 1985ஆம் ஆண்டில் தினசரி சராசரியாக 109 உள்நோயாளிகளும், 270 வெளிநோயாளிகளும் சிகிச்சை பெற்றுள்ளனர். அதே ஆண்டில் மொத்தமாக 473 மகப்பேறு சிகிச்சையும், 266 சிறு அறுவை சிகிச்சையும், 33 பெரிய அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளன. மேலும் அகில இந்திய பேறுகால பிற்காப்புத்திட்ட விரிவாக்கப் பணியின் (Post Partum Extention Programme) கீழ் 6 படுக்கைகளுடன் கூடிய அறுவையரங்கு ரூ. 5.20 லட்ச மதிப்பீட்டில் கட்டிடம் கட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது. கூடலூர் மருத்துவமனையில் பொது மக்களின் மருத்துவத் தேவைக்கேற்ப போதுமான அளவில் உள்படுக்கை வசதியுள்ளது.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் அங்கே 94 படுக்கை வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 94 படுக்கைகளில் பாதிக்கு மேல் நோயாளிகள் படுக்க லாயக்கு அற்றவையாக இருக்கின்றன. அந்த அளவுக்கு மோசமாக இருக்கிற படுக்கைகளை மாற்றிவிட்டு, அவைகளுக்குப் பதிலாக புதிய படுக்கைகளை அளிக்க அரசு முன்வருமா? அது மட்டுமல்ல. 1985 ஆம் ஆண்டு சராசரியாக 109 உள் நோயாளிகளும் 270, வெளி நோயாளிகளும் சிகிச்சை பெற்றுள்ளனர் என்ற விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 1986ஆம் ஆண்டு, 1987ஆம் ஆண்டுகள் பற்றிய விவரங்கள் ஏன் கொடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே. அரசாங்கம் அனுமதித்திருக்கிற படுக்கைகளின் எண்ணிக்கை 94, அந்தப் படுக்கைகளில் படுக்க வசதி இல்லாதவை, சரியாக இல்லாதவை இருந்தால் அவற்றை பழுதுபார்க்கலாம் அல்லது மாற்றலாம். அது வேறு விவகாரம். 1985ஆம் ஆண்டு புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள்; 1986, 1987 ஆம் ஆண்டுகள் பற்றிய புள்ளி விவரங்களை ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். தற்போது என்னிடம் அந்த விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் தரலாம்.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, இந்த கூடலூர் அரசு மருத்துவமனையில் இடவசதி மிகவும் குறைவாக இருக்கிறது. தாயகம் திரும்பிய தமிழர்கள் ஏராளமாக அங்கே குடியேறி இருப்பதால் படுக்கை வசதிகளை அதிகப்படுத்த வேண்டும் என்று

1987 ஏப்ரல் 25] [திரு. கே. உச்சி]

கேட்டதற்குப் பின்னால் அகில இந்திய பேறுகால பிற்காப்புத் திட்ட விரிவாக்கப்பணியின் கீழ் 6 படுக்கைகளுடன் 5.20 இலட்சம் ரூபாய்ச் செலவிலான கட்டடம் ஒன்று கட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்காக நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும், புரட்சித்தலைவரின் அரசுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணி எப்போது முடிவடையும், எப்போது துவங்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 11-00]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே துவங்கி, விரைவிலே முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) தூத்துக்குடி மருத்துவ மனையில் படுக்கை வசதிகளை அதிகரித்தல்

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அரசு பொது மருத்துவமனையில் போதிய படுக்கை வசதி மற்றும் வெறி நாய்க்கடி தடுப்பு மருந்து இல்லாததால் அப்பகுதி நோயாளிகளின் கவலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தூத்துக்குடி அரசினர் தலைமை மருத்துவமனையில் தற்போது அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 236. புதிதாக 260 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு கட்டப்பட்டு வருகின்றது. அதற்குத்தேவையான பணியாளர்கள் தொகுதி மற்றும் செலவினங்கள் வழங்க அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த புதிய 260 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு துவங்கப்பட்டால் அனுமதிக்கப்பட்ட மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 496 ஆக உயரும். இம்மருத்துவமனையில் தற்போது உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருபவர்களின் சராசரி எண்ணிக்கை 328. ஆகவே புதிய வார்டு உபயோகத்தில் கொண்டுவரும் நிலையில் இம்மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் போதுமானதாக அமையும்.